**SC.No.191/2021**

**நாள்.** 14.12.2023

**அ.சா.1–** சதீஸ்குமார்

(எதிரி , பவித்ரன் ஆஜார்.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து விசாரிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டு CrlM.No.1601/2023 அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை –

09.01.2020 ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற போதுதான் முதன் முதலாக போலீசை பார்த்தேன். 09.01.2020 ம்தேதி அதிகாலை 1.00 மணிக்க முன்பாக நான் போலீசை நான் பார்க்கவில்லை. நான் கொடுத்த புகாரை இன்ஸ்பெக்டர் எழுதினார். புகார் கொடுக்க நான் மட்டும்தான் காவல் நிலையம் சென்றேன். அப்போது விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்த்தார்கள். அங்கு வந்த போலீசார் ஆட்டோவின் உடைந்த பாகங்கள், மோட்டாரரின் உடைந்த பாகங்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். சம்பவ நடந்த இடத்திற்கும் உச்சிப்புளி காவல் நிலையத்திற்கும் இடையே 4 கிலோ மீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்க அடுத்தடுத்தாக ரோட்டுக்கு வடபுறம் வீடுகள் உள்ளது. தெற்கு புறம் வீடுகள் இல்லை. நான் ஆய்வாளருடன் சம்பவ இடத்திலேயே பைக் மற்றும் ஆட்டோ கிடந்தது. விபத்து நடந்த போது மாலை சுமார் 5.30 மணி. நான் தான் இருச்சக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். காயம்பட்ட நபர் உட்கார்ந்து வந்தார். எனக்கு வலது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டது. நான் விபத்து நடந்த உடனே 108 ஆப்புலன்சில் அடிப்பட்ட நபரை ஏற்றிக் கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வரவில்லை. ஆட்டோ மூலமாக நான்

அடிப்பட்ட உச்சிப்புளி அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றேன். உச்சிப்புளி அரசு மருத்துவ மனையில் அடிப்பட்ட நபரை உச்சிப்புளி அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவர் பார்த்து அடிபட்ட விபரத்தை கேட்டு எழுதிக்கொண்டார். பிறகு அடிப்ட்ட நபர் சீரியசாக இருப்பதால் மேல் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனை இராாமநாதபுரம் கொண்டு செல்ல பரிந்துரைத்தார். அப்போது எனக்கு செல்போன் இல்லை. அடிப்பட்ட தாயாருக்கோ மனைவிக்கோ அடிப்பட்ட விபரத்தை அன்றைய தினம் செல் போன் மூலமகவோ போன் மூலமாக தகவல் தெரிவிக்கவில்லை. உச்சிப்புளி அரசுமருத்துவமனையில் சுமார் அரை மணி நேரம் இருந்தோம். உச்சிபுளி அரசு மருத்துவமனையில் இருந்து 10 அடி தள்ளி எதிர் புரத்தில் காவல் நிலையம் உள்ளது. மேற்படி இறந்து போன எனது அண்ணன் சீனிவாசன் உச்சிப்புளியில் இல்லை ஆக்கிர வலசை கிராமத்தில் வசித்து வருகிறார். நான் உச்சிபுளி அடிப்பட்ட எனது அண்ணன் உடன் இருந்த போது தான் உச்சிப்புளி காவல் நிலையத்திற்கோ இறந்து போன நபரின் தாயாருகோ நான் தகவல் தெரிவிக்க வில்லை. உச்சிப்புளி மருத்துவ மனையில் இருந்தது நேரடியாக இராமநாபுரத்தில் உள்ள ஆசிக் மருத்துவ மனையிக்கு எடுத்து சென்றேன். ஆசிக் மருத்துவ மனைக்கு 108 ஆப்புலன்சில் தான் வந்தோம். ஆசிக் மருத்துவ மனையில் இறந்துபோன நபரை பார்த்து காயங்களை கேட்டு எழுத்திக் கொண்டார் என்னையும் கேட்டார். உச்சிப்புளி அரசு மருத்துவ மனையிலோ அல்லது ஆசிக் மருத்துவ மனையிலோ எனது வலது சுண்டு விரல் நைந்து போனதற்கு சிகிச்சை ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை. உச்சிப்புளியில் இருந்து இராமநாதபுரம் 19 கி.மீ. என்றால் சரியல்ல, 28 கி.மீ இருக்கும். உச்சிப்புளி மருத்துவமனையில் இருந்து இராமநாதபுரத்தில் உள்ள ஆசிக் மருத்து மனைக்கு 20 நிமிடத்தில் வந்துவிட்டோம். ஆ சிக் மருத்துமனையில் இறந்து போன நபரை மதுரை உள்ள மருத்து மனைக்கு அழைத்து செல்ல கூறிவிட்டார். ஆசிக் மருத்துவமனையில் சுமார் அரை மணிநேரம் இருந்திருப்போம். ஆசிக் மருத்துவமனையில் இருந்து மதுரை அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் போது நான் உடன் செல்ல

வில்லை புகார் கொடுக்க நான் இருந்துவிடடேன். ஆசிக் மருத்துவ மனையில் நான் எனது அண்ணனுடன் இருந்தபோது அங்கு வேறு யாரவது இருந்தார்களா என்றால் எனது அண்ணி மற்றும் எனது அம்மா வந்துவிட்டார்கள். ஆசிக் மருத்துவமனையில்இருந்து மதுரை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் போது மணி மாலை சுமார் 7.30 இருக்கும். ஆசிக் மருத்துவமனையில் இருந்து மதுரை விக்ரம் மருத்துவ மனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது தாயார் எனது அண்ணி உடன் சென்றார். உடனடியாக நான் உச்சிப்புளி காவல் நிலையம்சென்று புகார் கொடுத்தேன் அதை அவர்கள் எழுதிக் கொண்டாக்ள். நான் சொன்ன புகாரை ஆய்வாளர் எழுதினார். முதலில் சாட்சி உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு 10.00 மணிக்கு சென்றதாக சொன்னார் பின்னிட்டு இரவு 1.00 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு சென்றதாக சொன்னார். நான் கொடுத்த புகரில் விபத்து நடந்த பிறகு உடனடியாக ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு உச்சிப்புளி மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதையோ அங்கு அவருக்கு முதல் சிசிக்சை அளித்த விபரத்தையோ பின்னிட்டு உச்சிப்புளி மருத்துவ மனையில் இருந்து இராமநாதபுரத்தில் உள்ள ஆசிக் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதை புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியுள்ளேன். எனக்கு ஏறபட்ட காயத்தை ஆய்வாளர் காட்டவும் இல்லை நான் சொல்லவும் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயத்தை பொருத்து நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் இவ்வாறு சொல்வது தவறு என்றும் அதனால் நான் யோசித்து ஆய்வாளாரிடம் புகார் கொடுக்கும்போது என்னுடைய காயத்தை பொறுத்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உச்சிப்புளி காவல் நிலையத்தில இருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு இடைப்பட்ட துாரத்தில்தான் புதுமடம் செல்லும் ரோடு இருக்கிறது என்றால் உச்சிப்புளி காவல் நிலையத்தில் இருந்து 2 கி.மீ. தள்ளி உள்ளது. அந்த சம்பவம் நடந்த இடத்திற்கு சுமார் 10 அடி துாரத்தில் 4 பிரிவு ரோடு உள்ளது என்றால் சரியல்ல விபத்தானது 4 ரோட்டிலேயே நடைபெற்றது. அந்த ரோடுப்பகுதி அதிக போக்குவரத்து உள்ளது என்றால் சரிதான். அடிபட்டவுடன் அங்கு அதிக

கூட்டம் கூடிவிட்டது என்றால் சரியல்ல. ஒரு நபர் மட்டும் இருசக்கர வாகனத்தில் வந்தார் அவர் பெயர் கோவிந்தன். சிறிது நேரத்தில் அங்கு கூட்டம் கூடிவிட்டது. புயல்காப்பகம் அலுவலகத்திற்கு அருகில் போலீஸ் பீட் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. டி.என்.65 எல் 6364 ஹோண்டா சைன் வாகனமானது என்னுடையதுதான். வாகனத்தின் ஆவணத்தை போலீசார் வாங்கிவைத்துக்கொண்டார். அந்த வாகனமானது இன்றைய தேதி வரை காவல் நிலையத்தில்தான் நிறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனத்தை நான் திரும்ப ஒப்படைக்க கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னை போலீசார் விசாரித்தபோது என்னுடைய வாக்குமூலத்திலோ நான் கொடுதத புகாரிலோ எதிரி எங்களை பார்த்து இன்னுமாடா சாகவில்லை என்று சொல்லிவிட்டு நான் சாட்சியத்தில் சொன்ன விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். மேலும் என்னுடைய விசாரணையில் விபத்திற்கு பின்னிட்டு தான் உச்சிப்புளி மருத்துவமனைக்கு சென்ற விபர்தையோ பின்னிட்டு மேல்சிகிச்சைக்கு இராமநாதபுரம் ஆசிப் மருத்துவமனைக்கு சென்ற விபரத்தையோ மேலும் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு சென்றைதை சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். எதிரியானவர் சம்பவம் இடத்திற்கு 2 நாட்களுக்கு முன்பாக என் அண்ணனை வண்டியின் சாவியை வைத்து என் அண்ணனின் தாடையை கிழித்துவிட்டார். எனது அண்ணனுக்கு வைத்தியம் பார்ப்பதற்காக துத்திவலசையில் உள்ள சிறிய தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அந்த காயத்திற்கு எனது அண்ணனுக்கு அங்குவைத்து தையல் போடப்பட்டது. எனது அண்ணனுக்கு வைத்தியம் பார்த்த மருத்துவரின் பெரையோ மருத்துவனையின் பெயரையோ சொல்ல முடியுமா என்றால் அந்த மருத்துவமனையின் பெயர் கம்பவுண்டர் கிளினிக். தையல் போட்ட நபரின் பெயர் எனக்கு தெரியாது. போலிசாரிடம் இந்த விபரத்தை நான் சொல்லவில்லை. எனது அண்ணனுக்கு தாடையில் ஏற்பட்ட காயத்திற்கு கட்டுப்போடப்பட்டது என்றால் பிளாஸ்டர் போடப்பட்டது. இந்த சம்பவத்திற்கு

அடுத்த நாள்தான் சம்பவம் நடந்தது. அப்போது எனது அண்ணன் தனக்கு ஏற்பட்ட தாடை காயத்திற்கு பிளாஸ்டர் போட்டிருந்ததார். இந்த தகராறை தவிர வேறு தகராறு ஏதும் இல்லை. எனது அண்ணனுக்கு தாடையில் ஏற்பட்ட காயமானது ஆட்டோ ஸ்டாண்ட்டில் நடந்தது. மாலையில் நடந்ததாக எனது அண்ணன் சொல்ல தெரிந்து கொண்டேன். நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியது போலவும் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு 07.01.2020 தகராறு நடந்த அதனால் எனது அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது பொய் என்றால் சரியல்ல. எனது அண்ணனை அடிபட்டவுடன் நான் தூக்கியபோது எனது அண்ணனின் இரத்தமானது எனது சட்டையில் பட்டது அதை போலீசார் பார்த்தார்கள் ஆனால் அதை வாங்கிக்கொள்ளவில்லை. நான் சொன்னதுபோல சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியால் என் அண்ணனுக்கு எநதவித காயத்தையும் ஆட்டோவில் மோதி காயத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும் எனது அண்ணனுக்கு சாலை விபத்தில் காயம்பட்டார் என்றாலும் அவரை முத்துக்குமார் என்பவர்தான் முதன்முதலாக மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார் என்றாலும் சரியல்ல. எனது அண்ணனும் எதிரியும் ஒரே ஸ்டாண்ட்டில் ஆட்டோ வைத்து தொழில் செய்தவகையில் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக காயம்பட்டவரை இவர் மூலமாக காயம் ஏற்பட்டதாக கூறி புகார் கொடுத்து வழக்கு பதியப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் டி.என்.65 எல் 6364 என்ற வண்டியில் நானும் எனது அண்ணனும் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் மேற்படி வண்டியில் அவராக சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும் அதை மறைப்பதற்காக பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் புகார் ஏதும் கொடுக்கவில்லை

என்றால் சரியல்ல. பின்யோசனை செய்து புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.